

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 16-03-2025


# உண்மை மீது விவாதம் எதற்கு?

சசிகலாவின் காலை நோக்கி ஊர்ந்து போய் முதலமைச்சர் ஆன எடப்பாடி பழனிசாமி, அந்தப் பதவியைத் தக்க வைக்க பா.ஜ.க.வின் பாதம் தாங்கினார், அதற்காக தமிழ்நாட்டையே பா.ஜ.க.வுக்கு அடமானம் வைத்தார் என்பது ஊரறிந்த உண்மை ஆகும். இந்த உண்மை மீது விவாதம் நடத்த வேண்டுமா என்ன? 'கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு?' என்பதைப் போல, பழனிசாமியின் துரோக வரலாற்றை விவாதம் நடத்தித்தான் வெளிச்சம் போட வேண்டுமா?

பதவி பறிக்கப்பட்டுப் பரிதாபமாக நிற்கும் பழனிசாமி, 'தமிழ்நாட்டு மக்கள் பழசு அனைத்தையும் மறந்திருப்பார்கள்' என்று அதிகப்படியாகத் துள்ளிக் குதிக்கிறார். 'நான் எங்கே தமிழ்நாட்டை அடமானம் வைத்தேன்? நான் விவாதிக்கத் தயார்' என்று பழனிசாமி குதிப்பதும், அதற்கு, 'ஜெயலலிதாவால் பதவி பறிக்கப்பட்ட' ஜெயக்குமார் சாமரம் வீசுவதும் சகிக்கவில்லை.

**ஜெயலலிதாவே எதிர்த்த 'உதய் மின்' திட்டத்தில் கையெழுத்திட்டது யார்? 2016 வரையில் நடக்காத நீட் தேர்வை 2017- ஆம் ஆண்டிலிருந்து நடத்த அனுமதித்தது யார்? நாடாளுமன்றத்தில் சுரங்க, கனிம வள மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்த அடிமைக் கட்சி எது? குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ஆதரித்து, சட்டம் வர காரணமாக இருந்தது யார்? முத்தலாக் சட்டத்தை ஆதரித்துப் பேசியது யாருடைய நாக்கு? - இப்படி தொடர் துரோகம் கொண்டதுதான் பழனிசாமியின் வரலாறு.**

**இந்தியாவில் மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்த ஒரே கட்சித் தலைவர் பழனிசாமிதான். 'மூன்று வேளாண் சட்டங்களுக்கு ஆதரவாக விவாதம் நடத்தத் தயார்' என்று சவடால் விட்டவர்தான் பழனிசாமி. டெல்லியில் போராடும் விவசாயிகளை 'புரோக்கர்கள்' என்ற புரோக்கர்தான் பழனிசாமி.**

குடியுரிமைதிருத்தச் சட்டமே அ.தி.மு.க. வாக்களித்ததால்தான் நிறைவேறியது. 'எந்த முஸ்லிம் பாதிக்கப்பட்டார்? காட்டுங்கள்' என்று வாய்ச்சவடால் விட்டவர் அவர்தான்.

இப்போதுகூட, தமிழ்நாட்டுக்கான கல்வி நிதியை நிறுத்தி வைத்திருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை பழனிசாமி கண்டித்தாரா? அது யாருடைய நிதி? தி.மு.க.விற்கு வர வேண்டிய நிதியா? நம் மாணவர்களின் கல்வி நிதிதானே! நியாயமாக எதிர்க்கட்சித் தலைவராக என்ன செய்திருக்க வேண்டும்? ஒன்றிய அரசின் செயலைக் கடுமையாக எதிர்த்திருக்க வேண்டும். எதிர்த்தாரா பழனிசாமி?

**'மும்மொழிக் கொள்கையை அமல்படுத்தினால்தான் நிதி தருவோம்' எனப் பகிரங்கமாக ஒன்றிய கல்வி அமைச்சர் கூறுகிறார். பழனிசாமி கோபப்பட்டுப் பொங்கி எழுந்து ஒன்றிய கல்வி அமைச்சரைக் கண்டித்தாரா? தமிழர்களை 'நாகரிகமற்றவர்கள்' என அவமதித்த ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை தி.மு.க. தீரத்தோடு எதிர்த்தது. பழனிசாமி 'ரெய்டு' பயத்தோடு பதுங்கினார்!**

'அடிமையின் உடம்பில் ரத்தம் எதற்கு? தினம் அச்சப்பட்ட கோழைக்கு இல்லம் எதற்கு?' எனப் பாடினார் எம்.ஜி.ஆர். கோழை பழனிசாமியின் உடம்பில் ஓடியது அடிமை ரத்தம்தானே!

**மக்களாட்சியை ஒழித்து, சர்வாதிகார அதிபர் ஆட்சியைக் கொண்டு வரத் துடிக்கும் பா.ஜ.க.வின் மறைமுகச் சதித்திட்டம்தான் ஒரே நாடு - ஒரே தேர்தல். இந்தத் திட்டத்தை முதன்முறையாக மோடி அரசு கொண்டு வர முயன்ற போது, அம்மையார் ஜெயலலிதா உயிருடன்தான் இருந்தார். 2015-ஆம் ஆண்டு இந்தத் திட்டத்துக்கு ஜெயலலிதா ஆதரவு தெரிவித்து, நாடாளுமன்ற நிலைக்குழுவிடம் அ.தி.மு.க. அறிக்கையே வழங்கியது. அதன்பிறகு பழனிசாமி அவர்கள் ஆட்சியில் அமர்ந்த போது, 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தை மீண்டும் கொண்டுவர முயன்றார் பிரதமர் மோடி. இதை 2018 ஆம் ஆண்டு எதிர்த்தார் பழனிசாமி.**

2021ஆம் ஆண்டு நடக்க வேண்டிய தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2019ஆம் ஆண்டு நடந்தால் தனது பதவி முன்கூட்டியே போய் விடும் என்று பயந்தார் பழனிசாமி.

2018 ஜூலை 7 மற்றும் 8 தேதிகளில் டெல்லியில், நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 7 தேசியக் கட்சிகளும் 59 மாநில கட்சிகளும் பங்கேற்றன. அ.தி.மு.க. சார்பில் தம்பிதுரையும் சி.வி. சண்முகமும் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்திற்கு முன்பாகவே 'ஒரே நாடு - ஒரே தேர்தல்' திட்டத்திற்கு அ.தி.மு.க. கடும் எதிர்ப்பு தெரிவித்தது. 2018 ஜூன் 29-ஆம் தேதி சட்ட ஆணையத்திற்கு அன்றைக்கு ஒருங்கிணைப்பாளராகவும் இணை ஒருங்கிணைப்பாளராகவும் இருந்த பன்னீர் செல்வமும் பழனிசாமியும் சேர்ந்து கடிதம் எழுதினார்கள். அதில், 'ஒரே நாடு - ஒரே தேர்தலுக்கு' எதிர்ப்பைப் பதிவு செய்ததோடு, தற்போதைய சட்டமன்றத்தின் ஆயுட்காலத்தைக் குறைக்கும் வகையில் எந்த மாற்றமும் கொண்டுவரக் கூடாது எனவும் சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சிக்கு எந்தப் பங்கமும் வராமல் பார்த்துக் கொண்டார்கள். தி.மு.க. ஆட்சி அமைந்தபிறகு அப்படியே பல்டி அடித்தார் பழனிசாமி. ஆதரித்துக் கொண்டிருக்கிறார்.

பழனிசாமிக்குப் பதவி கொடுத்தது சசிகலாதான் என்பது ஊரறிந்த உண்மை. 'நீ ஏன் கட்சியைச் சொந்தம் கொண்டாடுகிறாய்? நீ எனக்குப் பதவி கொடுத்தியா?' என்று கேட்ட துரோகி தான் பழனிசாமி. இந்தத் துரோகப் படலத்தை எல்லாம் பட்டிமன்றம் வைத்துத் தான் தெரிந்து கொள்ள வேண்டுமா?



முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.3.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 2025–2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி பூஜா குல்கர்னி, நிதித்துறை சிறப்புச் செயலாளர் பிரசாந்த் மு.வடநெரே, கூடுதல் செயலாளர் ஜி.கே. அருண் சுந்தர் தயாளன், கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர் திருமதி தி. சாருஸ்ரீ, துணைச் செயலாளர்கள் பிரத்திக் தாயன், செ.ஆ.ரிஷப் ஆகியோர் உள்ளனர்.

### 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற உயரிய நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மேம்பட்ட

# எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளம் அமைத்திருக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - தமிழ்நாடு பட்ஜெட் குறித்து பெருமிதம்!

**சென்னை, மார்ச் 16-**

**தமிழ்நாடு பட்ஜெட் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில், 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற உயரிய நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளம் அமைத்திருக்கிறது' என்று பெருமிதம் பொங்க அவர் குறிப்பிட்டுள்ளார்.**



சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசின் 2025 -2026ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :

- மகளிர் நலன் காக்கும் மாபெரும் திட்டங்கள்
- ததும்பி வழியும் தமிழ்ப் பெருமிதம்
- இளைஞர்களுக்கு உலகை வெல்லும் உயர்தொழில்நுட்பம்
- தமிழ்நாடெங்கும் வேலை வாய்ப்புகளை அள்ளித்தரும் தொழிற்பூங்காக்கள்
- புதிய நகரம்
- புதிய விமான நிலையம்
- புதிய நீர்த்தேக்கம்
- அதிவேக ரயில் சேவை

என நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிடும் முன்முயற்சிகள்! விளிம்பு நிலை மக்களை அரவணைக்கும் தாயுமானவரின் கரங்கள் என அனைவருக்குமான திட்டங்கள் பல இன்று அறிவிக்கப்பட்டுள்ளன!

'எல்லார்க்கும் எல்லாம்' எனும் உயரிய நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளம் அமைத்திருக்கிறது தமிழ்நாடு பட்ஜெட் 2025!

அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் நிதித்துறை அதிகாரிகள் அனைவர்க்கும் வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### அமலாக்கத் துறையின் ஆதாரமற்ற குற்றச்சாட்டு!

# சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிக்கை!

*சென்னை, மார்ச் 16-*

அமலாக்கத் துறையின் ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்கு சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் வி. செந்தில் பாலாஜி அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

சென்னை அமலாக்க இயக்குநரகம் 06-03-2025 அன்று சென்னை தமிழ்நாடு மாநில வாணிபக் கழக தலைமை அலுவலகம் உட்பட தமிழகத்தின் பல்வேறு இடங்களில் சோதனை நடத்தியது.

அதில் 13-03-2025 அன்று மாலை சோதனை தொடர்பாக வெளியிட்ட செய்தி குறிப்பில் பல்வேறு முதல் தகவல் அறிக்கைகள், பல்வேறு பிரிவுகளில் பதியப்பட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில், எந்த முதல் தகவல் அறிக்கை எந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்டது என்ற விவரங்கள் குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை.

கடைப்பணியாளர்களின் பணியிட மாறுதல் உத்தரவுகள், அவர்களின் குடும்ப சூழ்நிலை, மருத்துவ காரணங்கள், பணியில் தவறு செய்யும் பணியாளர்களை விடுவித்து அப்பணியிடங்களுக்கு மாற்றுப் பணியாளர்களை நியமித்தல், மனமொத்த மாறுதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக பணியிட மாறுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மூடப்பட்ட கடைகளில் பணியாற்றிய 2,157 கடைப்பணியாளர்களுக்கு 2023 ஆம் ஆண்டு கலந்தாய்வு மூலம் பணியிட மாறுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சரியான முறைகளின்படியே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போக்குவரத்து ஒப்பந்தப்புள்ளி பிப்ரவரி 2023-இல் கோரப்பட்டு, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை கோரிய ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு தமிழ்நாடு முழுவதும் நடைமுறைபடுத்தப்பட்டது. KYC விவரங்கள், வங்கி வரைவோலைகள் உள்ளிட்ட விண்ணப்பதாரர்களின் அனைத்து விவரங்களும் சரிபார்க்கப்பட்ட பின்பே ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் நிறுவனத்திற்கும் மற்றும் அரசிற்கும் வரவேண்டிய வருவாய் கணக்கிடப்பட்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சில போக்குவரத்து ஒப்பந்தம் தொடர்பான வழக்குகள் மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளன. எனவே இதில் முறைகேடுகள் எதுவுமில்லை.



கடந்த காலங்களில் நடைபெற்ற மதுக்கூட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் அனைத்தும் ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது. ஒவ்வொரு மதுக்கூடத்திலும் குறுமத் தொகை (Upset Price) முறையாக நிர்ணயிக்கப்பட்டு குறுமத் தொகைக்கு மேல் கூடுதலாக கேட்கப்படுபவர்களுக்கு மதுக்கூட உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே, 2020-2021 ஆம் ஆண்டு நடைபெற்ற மதுக்கூட ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் நடைபெற்றன. 2023 டிசம்பர் மாதம் மாவட்ட மேலாளர் அவர்களால் மதுக்கூட ஒப்பந்தங்கள் இணையவழி மூலமாக வரவேற்கப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), உதவி ஆணையர் (கலால்) மற்றும் மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் அடங்கிய மாவட்ட ஆட்சித்தலைவரால் அமைக்கப்பட்ட கூராய்வுக் குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் திறக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டன. இதுவரை இணையவழி மூலமாக மதுக்கூட ஒப்பந்த நடவடிக்கைகள் மூன்று கட்டங்களாக நடைபெற்றுள்ளன. சட்ட விதிகளுக்கு உட்பட்டே ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இந்தமுறை மூலம் டாஸ்மாக் நிறுவனத்தின் வருவாய் அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஒரு வணிக நிறுவனம். வணிகநோக்கில் மதுபான நிறுவனங்களிடமிருந்து உயரதிகாரிகளுக்குப் பல கோரிக்கைகள் வைக்கப்பட்டாலும், அக்கோரிக்கைகள் சட்ட, திட்ட விதிமுறைகளுக்குட்பட்டே பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் எவ்வித பாரபட்சமும் இன்றி உரிய வழிமுறையின் (Formula) அடிப்படையில் ஒவ்வொரு மதுபான வகையின் மூன்று மாத விற்பனை அளவினை கணக்கிட்டும், அவற்றுடன் கடைசி மாத விற்பனை அளவினை கணக்கிட்டும், அதனடிப்படையிலான கொள்முதல் வெளிபடையான இணைய வழியில் உரிய வழிமுறையில் மட்டுமே வழங்கப்படுகிறது.

மதுபான உற்பத்தியாளர்கள் மற்றும் மதுபுட்டிகள் தயாரிப்பு நிறுவனங்களுக்கிடையே (Bottling Companies)-ல் பணபரிமாற்றங்கள் நடைபெற்றதாக தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுகள் அந்த இரு நிறுவனங்களுக்கு இடையேயானது எனினும், இந்த பணப்பரிமாற்றங்களைப் பயன்படுத்தி தமிழ்நாடு மாநில வாணிபக் கழக நிறுவனத்திடம் இருந்து கூடுதல் கொள்முதலைப் பெற்றதாக தெரிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. மேலும், இதில் ரூபாய் 1000 கோடி முறைகேடு நடந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. இவ்வாறு உள்நோக்கத்தோடு ஆதாரங்கள் ஏதுமின்றி முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை முற்றிலும் மறுப்பதோடு, இதுதொடர்பான சட்டப்பூர்வ நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தமிழ்நாடு அரசின் 2025–2026ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக நேற்று முன்தினம் (14.03.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.